**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் – உதவி இயக்குநர் (நிர்வாகம்) பணியிடத்தை நிர்வாக அலுவலர் என பெயர் மாற்றம் (Redesignate) செய்தல் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரைக் கொண்டு நிரப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 8** **நாள்: 28.03.2017**
**துன்முகி – பங்குனி, 15**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண் 89, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 12.07.2012.

2 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 326/நிர்–2/2014, நாள் 02.09.2015 மற்றும் 03.08.2016

3 முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண் பணி–1(1)/5117/2016, நாள் 18.03.2016.

––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தில் உள்ள உதவி இயக்குநர் (மாற்றுத் திறனாளிகள் நலன்) பணியிடத்தினை, உதவி இயக்குநர் (நிர்வாகம்) என பெயர் மாற்றம் செய்து, அப்பணியிடத்தில் வருவாய்த் துறையிலிருந்து துணை ஆட்சியர் நிலையில் உள்ளவர்களைக் கொண்டு மாற்றுப் பணியில் நிரப்பிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், உதவி இயக்குநர் (நிர்வாகம்) பணியிடத்தினை தமிழ்நாடு குடிமைப் பணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள துணை ஆட்சியரைக் கொண்டு நிரப்பிடாமல், ஆணையரகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் அலுவலர்களைக் கொண்டு நிரப்பிடலாம் எனவும், உதவி இயக்குநர் (நிர்வாகம்) பணியிடத்தினை பரிமாற்றத்தக்க (interchangeable) முறையில் பணியமர்த்திட ஏதுவாக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களைக் கொண்டு நிரப்புவது ஏற்புடையதாக அமையும் எனவும், அதன் அடிப்படையில் தற்போது மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களை பணிமாறுதல் மூலம் உதவி இயக்குநர் (நிர்வாகம்) பணியிடத்தில் பணியமர்த்தி, அதற்கு ஏதுவாக உதவி இயக்குநர் (நிர்வாகம்) என்ற பணியிடத்தின் பெயரை நிர்வாக அலுவலர் என பெயர் மாற்றம் செய்து, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களின் ஊதிய விகிதத்திற்கு இணையாக அப்பணியிடத்தின் ஊதிய விகிதத்தை ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400/– லிருந்து ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.5100/– எனக் குறைத்து ஆணை வெளியிடுமாறும், இதன் மூலம் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், அதன் பின்னர், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அரசுக்கு சமர்ப்பித்த கருத்துருவில், உதவி இயக்குநர் (நிர்வாகம்) பணியிடத்தினை துணை ஆட்சியரைக் கொண்டு நிரப்பாமல்,

இப்பணியிடத்தினை decadre செய்து ரூ.15600–39100 + த.ஊ. ரூ.5400/– எனும் ஊதிய விகிதத்தில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் அடுத்த முதுநிலையில் உள்ள நபரைக் கொண்டு நிரப்பிட ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் மேலே இரண்டில் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு குறித்து அரசு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் எவ்வித ஆட்சேபனையும் (No Objection) இல்லையெனத் தெரிவித்துள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை, முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கையுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அரசாணை (நிலை) எண் 244, நிதி (PC)த் துறை, நாள் 22.07.2013ல் நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு ரூ.9300–34800 + த.ஊ. 5100/– எனும் ஊதிய விகிதத்தினை 01.01.2006 முதல் கருத்தியலாக நிர்ணயம் செய்து, 01.04.2013 முதல் பணப்பயன் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பணியிடத்திற்கு ரூ.9300 – 34800 + த.ஊ. 5100/– எனும் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்நிலையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தில் உள்ள 'உதவி இயக்குநர் (நிர்வாகம்)' பணியிடத்தினை வருவாய்த் துறையிலிருந்து துணை ஆட்சியர் (Deputy Collector) நிலையில் உள்ளவரைக் கொண்டு நிரப்புவதற்கு பதிலாக, இப்பணியிடத்தினை 'நிர்வாக அலுவலர்' என பெயர் மாற்றம் (Redesignate) செய்து, அப்பணியிடத்தை ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.5100/–இல் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரைக் கொண்டு நிரப்பிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அலுவல் சாரா எண்14147/நிதி (ச.ந.)/2017, நாள் 25.03.2017ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

செயலாளர், வருவாய்த் துறை, சென்னை–9.
நிதி (ச.ந./CMPC)த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்